மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

அசல் வழக்கு எண். 182/2018

2026ம் ஆண்டு ஜனவரி 19ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராதா | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

19.01.2026 பி.வா.சா.1 சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1. நான் வருவாய் துறையில் வட்ட வழங்கல் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது கூடுதல் பொறுப்பாக மண்டல துணை வட்டாட்சியராக இருந்து வருகிறேன். வழக்கு நிழலி கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்தின் ரீ.ச.எண் 657/1. இந்த ரீசர்வே எண் எந்த ஆண்டிலிருந்து நடைமுறையில் இருந்து வருகிறது என்றால் வருடம் சரியாக தெரியவில்லை. 1980 ஆம் ஆண்டு வாக்கில் இருந்து நிலையிலிருந்து வருகிறது ரீ.ச.எண் 657/1ன் பழைய க.ச.எண்.766 மற்றும் 761. எந்த ஆண்டிலிருந்து பழைய க.ச.எண் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்றால் அது எனக்கு தெரியாது. பழைய க.ச.எண்.766 மற்றும் 761. ஆகியவை எங்கள் ஆவணங்களில் என்ன வகைப்பாட்டில் இருந்து வருகிறது என்றால் ஓடை என்ற வகைப்பாட்டில் இருந்து வருகிறது.

2. பழைய க.ச.எண்.766 மற்றும் 761. எந்த ஆண்டில் உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் அது எனக்கு தெரியவில்லை. க.ச.எண்.761 மற்றும் க.ச.எண்.766 பி ஆகிய நிலங்களைப் பொறுத்து ஒரு காளியப்ப கவுண்டர் என்பவருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எங்கள் ஆவணங்களின் அடிப்படையில் பட்டா எதுவும் வழங்கப்படவில்லை.

காளியப்ப கவுண்டருக்கு பட்டா வழங்கப்பட்டதன் அடிப்படையில் தான் வாதியின் முன்னோர்கள் 1934 ஆம் ஆண்டு பாககாரர் செய்து கொண்டார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணம் காங்கேயம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.540/1934 என்று பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணம் தான் வாதியின் முன்னோர்கள் ஏற்படுத்திக் கொண்ட பாக்கறார் ஆவணம் என்றால் வருவாய்த்துறை ஆவணங்களில் அது குறித்து குறிப்புகள் எதுவும் இல்லை. மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் தான் வாதியின் முன்னோர்கள் வங்கியில் தாவா சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கியுள்ளார்கள் என்றால் அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. வருவாய் துறை ஆவணங்களான பட்டா சிட்டா மற்றும் ஆ பதிவேடுகள் ஆகியவை எங்களின் கட்டுப்பாட்டில் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான்.

4. 761 மற்றும் 766 பி ஆகிய நிலங்களின் பட்டா எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது 1934 பாகக்கறார் ஆவணத்தின் அடிப்படையில் பட்டா எண் 425 எங்களின் அலுவலகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து பட்டா கேட்டு வாதி முதலமைச்சரின் தனி பிரிவிற்கு பல்வேறு தேதிகளில் மனு கொடுத்தும் நாங்கள் வாதிக்கு தாவா சொத்தை பொறுத்து பட்டா வழங்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை 2017 ஆம் ஆண்டு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் பார்வையிட்டு பயனாளிகளுக்கு கொடுக்கப்பட்ட பட்டாவை ரத்து செய்துவிட்டார் என்றால் நீதிமன்றத்தில் வழக்கு இருந்ததால் அந்த பட்டாவை ரத்து செய்துள்ளார்கள்.

5. 26.11.2018 தேதியில் அந்த பயனாளிகளுக்கு வேறு இடத்தில் பட்டா கொடுத்தார்கள் என்றால் அவர்கள் தகுதியான பயனாளிகள் என்பதால் வேறு இடத்தில் பட்டா வழங்கப்பட்டது. 1934 ஆம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்திற்கு எதிராக தாவா சொத்தை பொறுத்து நாங்கள் எந்த உரிமையும் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல.

வாதிகள் கேட்டுக் கொண்டுள்ளவாறு இந்த வழக்கு தீர்ப்பாகத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.
மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.01.19 18:39:01 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்.